பிப்ரவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் அந்த ஆண்டுக்குரிய உடைகள் வழங்கப்பட்டுவிட்டன என்ற குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

Representation from Pharmacists Association

*277 Q.—THIRU A. SWAMIDASS

DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Pharmacists Association has submitted any memorandum to the Government order about 28th January 1971 ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் திட்ட இயக்குநருக்கு 17—2—1971 அன்று ஒரு மனு கிடைக்கப்பெற்றது.

(இ) அந்த மனுவில் கண்ட கோரிக்கைகள் கீழ் வருமாறு அமைந்திருந்தன—

(1) சம்பள விகிதத்தை உயர்த்தல்.

(2) பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள் அளித்தல்;

(3) குடியிருப்பு வசதிகள் அமைத்தல்;

(4) வாராந்திர விடுப்பு எடுப்பதற்கு விடுப்பு ஒதுக்கு இடங்கள் ஏற்படுத்துதல்;

(5) எழுத்துப்பணி படியினை உயர்த்துதல்.

(6) சங்கக் கட்டடம் கட்டுவதற்கு சென்னையில் ஒரு இடம் ஒதுக்குதல்;

திரு. எ. சுவாமிதாஸ் : இந்த பார்மஸிஸ்டுகளினுடைய கோரிக்கைகளில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா? அவற்றைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கைகள் முறைப்படி அரசாங்கத்தினுடைய அந்தத் துறையினரால் ஆராயப்பட்டிருக்கின்றன. சம்பள

[1972 மார்ச் 3

விகிதத்தை உயர்த்த வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். பள்ளி இறுதித் தேர்வுக்குப் பின்னால் ஓராண்டு காலமே அவர்கள் அதிகமாகப் பயிற்சி பெற்றவர்கள் என்ற நிலையினைப் பெற்றவர்களாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய சம்பளம், அஸிஸ்டென்டுகளுக்கு வழங்கப்படுகிற சம்பளத்தைவிட ஒரு படி மேற்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்துத்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கும் மேற்பட்டு சம்பளம் அவர்களுக்குக் கொடுப்பதென்பது, இருக்கின்ற தகுதிக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாக இல்லை. There is no case to comply with their request. அதிகச் சம்பளம் கேட்கிற அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே அவர்கள் பெற்றுவந்த சம்பளம் ரூ. 90-4-100-5-140 ஆகும். சென்ற ஆண்டு ஊதியக்குழு அவர்களுடைய சம்பள விகிதத்தை ரூ. 210-5-245-325 என்று உயர்த்தலாம் என்று பரிந்துரைத்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, ரூ. 90-லிருந்து ரூ. 210-க்கு அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறபோது, மேலும் அதிலே குறை கூறுவது என்பது நாட்டினுடைய மொத்த சூழ்நிலையை மறந்துவிட்டு எடுத்து வைக்கும் கோரிக்கையாகும். அதேபோல் அவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகிற காரணத்தால், 'சீஃப் பார்மசிஸ்ட்' என்கிற பதவிகள் 16 அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 16 மட்டும் இருந்தது. இப்பொழுது 32 ஆக ஆக்கியிருப்பதால் ஒரு அளவுக்கு அந்தக் குறைகள் நீக்கப்படும். அவர்களுடைய மூன்றாவது கோரிக்கை, விடுகள் கட்ட வேண்டும் என்பது. பொதுவாகவே இப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டுகிறதைப் பொறுத்து அரசாங்கத்தினுடைய பொருளாதார நிலை காரணமாக அதிகமாக ஊக்குவிக்க முடியவில்லை. ஆனாலும், எந்தப் பணியாளர்கள் மருத்துவ மனையில் 24 மணி நேரமும் பணி புரிய வேண்டியிருக்கிறதோ அவர்களுக்கு ஓரளவுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் இருக்கிறது. லீவ் ரிசர்வ் வேகன்ஸியைப் பொறுத்து, யார் யார் விடுமுறையில் செல்ல வேண்டுமென்று கோருகிறார்களோ அவர்களுக்குப் பதிலாக நியமிப்பது குறித்து ஒரு கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். அதற்காக ஏறத்தாழ பத்து இடங்கள் அதிகமாக அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இலாக்கா அறிவித்து, அது ஓரளவுக்கு யோசிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதிகப்படுத்த முடியுமா என்பதும் ஆலோசனையில் இருக்கிறது.

1972 மார்ச் 3]

அடுத்து, எழுத்துப் பணிக்கு அதிக அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஐந்து ரூபாய் தரப்படுவதை பத்து ரூபாயாகத் தரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. அவர்களுடைய சங்கத்திற்குக் கட்டடம் கட்ட சென்னையில் ஓர் இடம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு பல்வேறு சங்கங்கள் கேட்டிருப்பதால் மொத்தமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய நிலையில் அது இருக்கிறது.

சூலூரிலுள்ள அரசு மருத்துவ மனை

* 278 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம், சூலூரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியை விஸ்தரித்து 24 படுக்கைகள் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : சூலூர் பிரதேசம் முக்கிய சென்டராக இருப்பதால் அங்குள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு ஆபரேஷன் தியேட்டரை அமைப்பதோடு, படுக்கைகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா? அங்குள்ள மக்களுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சூலூருக்காக வாதாடுவதற்கு அதை 'பிரதேசம்' என்று சொல்லி விட்டார்கள். அந்தப் பிரதேசத்திலேயே கோயம்புத்தூரில் மாபெரும் மருத்துவ மனை இருக்கிறது. சூலூர் வட்டமும் கோயம்புத்தூர் பிரதேசத்தைச் சேர்ந்தது தான். ஆனால், சூலூரில் மருத்துவ மனை விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றால், சிறிய அளவு உடைய அந்த இடத்தில் அந்த அளவுக்குத்தான் இன்றைக்கு அரசாங்கத்தால் அமைக்க முடியும். அதற்கு மேற்பட்டு அமைக்க பொருளாதார நிலை இடம் தராது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் படுக்கைகளின் எண்ணிக்கைக்கேற்ப போர்வைகள் இல்லை. 90 படுக்கைகளுக்கு 90 போர்வைகள் தேவை. அதைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?